**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 123/2022**
**Prosecution Witness – PW 7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஸ்டீபன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.07.2025.

(A1 to A10 are present.

முதல் விசாரணை–

நான் நாகர்கோவில் அசிசி ஆலய வளாகத்தில் ஆயர் இல்லத்தில் வசித்துவருகிறேன். நான் அருகில் உள்ள சேவியர் நிதி லிமிட் ல் மேலாண்மை இயக்குநராக பணியில் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் 2006 முதல் 2012 வரை குளச்சல் ஆலயத்தில் பங்கு தந்தையாக பணியில் இருந்தேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 16.10.2011ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் 20க்கும் மேற்பட்ட நபர்கள் குளச்சல் பீச் ஜங்சன் ரேசன் கடை பக்கம் கூடி கூச்சல் போட்டுகொண்டிருந்தார்கள் என்றும், நான் உடனே குளச்சல் காவல் ஆய்வாளர் பிராபகரன் செல்போனில் தொடர்பு கொண்டு, குளச்சல் ஜங்சனில் சுமார் 20 நபர்கள் கூடி கூச்சல் குழப்பம் செய்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்துகொண்டிருப்பதாக தகவல் சொன்னேன் என்றும், சம்பவ இடம் வந்த ஆய்வாளர், போலீஸ் வாகனத்தில் இருந்த ஒலிபெருக்கி மூலம் நாளை தேர்தல் நடைபெறுகிறது, ஆகவே சட்ட விரோதமாக கூட்டம் போடவேண்டாம்

கலைந்து செல்லுங்கள் என்று கூறியதாகவும், அப்போது கூட்டத்தில் இருந்து பொன்ஜிஸ் என்பவர் ஆய்வாளரை பார்த்து ஏலே போலீசு பேசாமல் பொத்திட்டு போ, இது எங்க ஏரியா, நாங்க ஆடுவோம், பாடுவோம் உனக்கு என்ன வலிக்குது என கூச்சல் இட்டு சொல்லவும், ஆய்வாளர் வாகனத்தில் இருந்து கீழே இறங்கி மீண்டும் அவர்களை தேர்தல் நேரமாக இருப்பதால் போலீஸ் சட்டம் பிரிவு 30(2) அமலில் இருப்பதாவும், எனவே காவல் துறைக்கு கீழ்படியும் படி கூறியதாகவும், அப்போது விர்ஜின் இக்னேசியஸ், ஜெயசீலன் இருவரும் ஆய்வாளரை பார்த்து மரியாதையாக போய்விடு இல்லையென்னால் உன்னை இங்கேயே கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தியதாவும், அவர்களை கைது செய்ய ஆய்வாளர் முற்பட்டதாகவும், உடனே அந்த கூட்டத்தில் இருந்து குளச்சல் மரமடிதாசன், விஜயன், பிரிட்டோ, ஜெயசீலன், துறைமுக தெரு வெரிஜின் இக்னோசியஸ், குளச்சல் மரமடி பொன்ஜிஸ், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த வில்சன், ஆன்டனி கலஸ்டன், ரோசன் ராஜன், ஆன்றோ பிரவின் (எ) ஜெரின் ஆகியோர்கள் சேர்ந்து ஆய்வாளரை பார்த்து கெட்ட வார்த்தைகளால் பேசி பக்கத்தில் வந்தால் , கொல்லாமல் உயிரோடு விடமாட்டோம் என கூச்சல் இட்டு மிரட்டியதாவும், போலீஸ் அருகில் சென்றவுடன் விஜயன் என்பவர் ஆய்வாளர் நெஞ்சில் அடித்து, ஆய்வாளரின் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி, அதில் ஆய்வாளர் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு வலது கால் முட்டில் இரத்த காயம் ஏற்பட்தாகவும், கீழே விழுந்த ஆய்வாளரை தாசன் ரோட்டின் ஓரம் கிடந்த சவுக்கு உருட்டு கம்பை எடுத்து ஆய்வாளரை பார்த்து, கெட்ட வார்த்தை பேசி சொன்னால் கேட்கமாட்டாயே இத்தோடு செத்து தொலைந்துபோ என்று சொல்லி ஆவேசமாக ஆய்வாளர் தலையில் ஓங்கி அடித்தபோது, ஆய்வாளர் வலது கையால் அதனை தடுத்ததில் அவரது முழங்கையில் பட்டு கை எழும்பு உடைந்துவிட்டதாகவும், ஆய்வாளர் சத்தம் போட்டபோது, எதிரிகள் அனைவரும் ஆய்வாளரை பார்த்து கெட்ட வார்த்தையில்

பேசி தப்பி போ, எங்களிம் மோதினால் உன்னை கொன்னு கடலில் வீசிவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், காயம் பட்ட ஆய்வாளரை சம்பவத்தினை பார்த்தவர்கள் அவரது போலீஸ் ஜீப்பில் குளச்சல் வினு மருத்துவமணைக்கு சிகிட்சைக்கு அனுப்பி வைத்ததாகவும் கேள்வி பட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஆஜர் எதிரிகளுடன் சுமூகமான உறவில் இருப்பதன் காரணமாக மேற்படி விபரங்களை மறைத்து உண்மைக்கு புறம்பாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**